International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 03 July to September 2021 www.irjtsjournal.org

# ர.சு.நல்லபெருமாளின் கல்லுக்குள் ஈரம் நாவலில் தேசியம்

முனைவர் பா. செல்வகுமார்,

கௌரவவிரிவுரையாளர்,
தமிழியல் உயராய்வுத் துறை, அரசு கலைக்கல்லூரி,
உதகமண்டலம் -01.

**ஆய்வுச் சுருக்கம்**

நாவல் இலக்கியம் ஐயோப்பியரின் கொடை எனலாம். எனினும் இங்கிருந்த காப்பிய செய்யுள் மரபுடன் அதனை நாம் தொடர்புப்படுத்திக் கொள்ள வேண்டியதும் அவசியமாகும். நாவல் உரையால் எழுதப்பட்டது மட்டுமல்லாமல் நவீன அறிவியல், அரசியல், அக்கலை ஆக்கச்சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டது என்றும் சொல்லலாம். 17ஆம் நூற்றாண்டில் **பொக்காசியே** எழுதிய **டெக்கமரானே** என்ற படைப்பில் நாவல் என்ற சொல் கையாளப்பட்டது. நாவல் என்ற சொல் இலத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்டது. கி.பி.1741ல் சாமுவேல் **ரிச்சர்ட்சன்** என்னும் மேற்கத்தியர் எழுதிய **'பாமெலா'** என்ற நாவலே முதல் நாவலாக அறியப்படுகிறது. இப்படித் துவங்கிய நாவல் களம் பல்வேறு காலகட்டங்களில் சூழலின் தன்மையை உள்வாங்கி பல்வேறு இலக்கியப் போக்குகளாக இஸங்களாக வளர்ந்திருக்கின்றன. இந்திய தேசியச் சிந்தனையை வெளிப்படுத்தும் நாவலாக ர.சு. நல்லபெருமாளின் கல்லுக்குள் ஈரம் இங்கு ஆய்வுக் களமாகிறது.

**கலைச்சொற்கள்**

இஸம், தேசியம், வர்க்கம், புனைவு, காங்கிரஸ், மிதவாதம், தீவிரவாதம், திராவிடம், இடது – வலதுசாரி.

**முன்னுரை**

காலனி ஆட்சியில் விளைந்தது தேசியம் என்னும் இஸம் அல்லது பார்வை. இந்தியா காலனி ஆட்சியில் சிக்கியிருந்த போது இங்கே தேசிய உணர்வுகளைக் கட்டமைக்கும் சிந்தனைகள் உருவாயின. அவற்றுள் ஒன்று காந்தியம் அஹிம்சையையும், நேதாஜியின் பயங்கரவாதத்தையும் கொண்டிருந்தது. இக்காலகட்டத்தில் உருவான சூழல்களைக் கதைக்கருவாக வைத்து நாவலாக உண்மையும் புனைவும் கலந்த பாத்திரங்களை நம்கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் நாவல்களில் ஒன்று ர.சு. நல்லபெருமாளின் கல்லுக்குள் ஈரம்.

**ர.சு.நல்லபெருமாள்**

ர.சு.நல்லபெருமாள் தமிழகத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவர். வழக்குரைஞருக்குப் படித்தவர். பாரதியார் வாழ்ந்த கடையத்துக்குப் பக்கத்து ஊரான ரவணசமுத்திரத்தில் சுப்பையாபிள்ளை சிவஞானத்தம்மாளுக்கு மகனாகப் பிறந்தவர். 50க்கும் மேற்பட்ட நாவல்கள் - வரலாற்று - தத்துவ நூல்களை எழுதியவர். 'அண்ணாச்சி' என்று செல்லமாக அழைக்கப்பட்டவர். எழுத்தாளர்களில் கல்கியின் அன்புக்குப் பாத்திரமானவர். இவர் தனது 81 வயதில் (20.04.2011) பாளையங்கோட்டையில் காலமானார். இவரின் எழுத்துகளில் இந்திய அரசியல் போராட்டங்களின் வரலாற்றுச் செய்திகள் கூடுதலாகவும் துல்லியமாகவும் பதிவு செய்யப்பட்டிருக்கும். இவருடைய நூல்கள் சில பின்வருமாறு.

***சிந்தனை வகுத்த வழி;*** *1965ல் எழுதப்பட்ட புத்தமதம் குறித்த* ***வரலாற்று நூல்****. 1971ல் தமிழக அரசின் சிறந்த நூலாகத்தேர்வு செய்யப்பட்டது.*

***நம்பிக்கைகள்; நாவல்****. ஆண் தெய்வங்களைப் பெண்கள் விரும்பியதாகச் சொல்லப்படுகின்ற சமூகத்தில் ஒரு ஆண், பெண் தெய்வத்தை விரும்பியதை 'அபிராமி பட்டர்' வழியாக முன்வைத்தவர். 1983ல் கஸ்தூரி சீனிவாசன் அறக்கட்டளை சார்பில் சிறந்த நாவலாகத் தேர்வு செய்யப்பட்டது.*

***உணர்வுகள் உறங்குவதில்லை; நாவல்.*** *1991ல் எம்.ஏ.சிதம்பரம் அறக்கட்டளை சார்பில் சிறந்த நாவலாகத் தேர்வு செய்யப்பட்டது.*

***கல்லுக்குள் ஈரம்; நாவல்.*** *1969. கல்கி வெள்ளி விழாவில் இரண்டாம் பரிசு பெற்றது. திருநெல்வேலி மாவட்டத்தை மையமாகக் கொண்ட விடுதலைப் போராட்டத்தை பேசியது.*

***எண்ணங்கள் மாறலாம்; நாவல்****. மருத்துவத் துறையை அதைச் சீரழிக்கிற மருத்துவர்களைக் குறித்தும் அதனால் சமூகம் அடைகிற துன்பங்களைப் பதிவு செய்வது.*

***திருடர்கள்; நாவல்****. நீதித்துறைக்குப் படித்துவிட்டுச் சமூக விரோதிகளாக வலம் வரும் வழக்குரைஞர்களைப் பற்றி எழுதப்பட்டது.*

***போராட்டங்கள்; நாவல்****. இந்தியில் சங்கர்ஷ் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்ட சிறப்புடையது.*

***சங்கராபரணம்****; ர.சு.வின் முதலும் முடிவுமான சிறுகதைத் தொகுப்பு.*

***மருங்கொழுந்து மங்கை****; சரித்திர நாவல்.*

***இந்தியச் சிந்தனை மரபு;*** *தத்துவ நூல்.*

***பாரதம் வளர்ந்த கதை****; இந்திய வரலாறு பற்றிப் பேசுவது.*

***கல்லுக்குள் ஈரம்***

*இந்திய தேசிய சுதந்திரப் போராட்டத்தை ஆதிக்குடிகளின் எழுச்சி, வர்க்கப் போராட்டம், சிப்பாய் கலகம், வரிகொடா இயக்கம் எனப்பலவாறு அதன் உள்ளமைந்த தர்க்கங்களில் இனம் காணாலாம். இத்தன்மையான பிரச்சினைகளையும் எடுத்துக்கொண்டு வெளிப்படையாக எழுந்த இயக்கங்கள் இந்திய தேசிய காங்கிரஸில் மிதவாதம் தீவிரவாதம், பயங்கரவாதம் என அறிந்துள்ளோம். இவை அனைத்தும் இந்தியா எனது தாய்நாடு என்னும் பற்றுதலாகவும் விளைந்தது என்பதையும் உணர்ந்திருக்கிறோம்.*

***"ஆங்கிலேயர் வருகையினால் இந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் இந்தியச் சமூக அமைப்பினையும் மாற்றத்திற்குள்ளாக்கின. சமூக மாறுதலையொட்டிக் கலை இலக்கியத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இலக்கியத் துறையையும் பாதித்தன"[1]*** *என்பார் ம.திருமலை. மேலும்* ***"அகிலனின் எங்கே போகிறோம்?, நா.பார்த்தசாரதியின் ஆத்மாவின் ராகங்கள், ர.சு.நல்லபெருமாளின் நாவல்கள், மு.வரதராசனாரின் நாவல்கள் காந்தீயக் கொள்கைகளை விளக்கும் நாவல்களே"[2]*** *என்பது இங்கே கவனிக்கத்தக்கது.*

*1969ல் முதல் பதிப்பாக வெளிவந்துள்ளது **கல்லுக்குள் ஈரம்.** 1900 முதல் 1960கள் வரையிலான காலகட்டத்தைப் பின்னணியாகக் கொண்டது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மிக முக்கியமாகத் தமிழகத்தில் திருநெல்வேலி, சென்னையை மையமிட்டுள்ளது. அதே சமயம் டில்லி, மும்பை போன்ற வடமாநிலங்களும் தென்னிந்திய திருவனந்தபுரம், கேரளப்பகுதிகளும் இடம் பெறுகின்றன.*

*இந்திய தேசிய காங்கிரஸில் ஏற்பட்ட உள் முரண்களையும் அதனதன் சார்பில் அதன் நியாயங்களையும் இதற்குள் சிக்கிக் கொண்ட கருத்துப் போராட்ட மாந்தர்களையும் அவர் வாழ்வியல் பிரச்சினைகளையும் தியாகங்களையும் உணர்த்தும் கலைப் படைப்புத்தான் 'கல்லுக்குள் ஈரம்'.*

***தேசிய இயக்கங்களும் கதை மாந்தர்களும்***

*தமிழ் நாவல்களின் உள்ளடக்கங்கள் ஒவ்வொரு பத்தாண்டுகளிலும் மாறி வந்துள்ளன. தேசியச் சிந்தனைகள் முதல் குடும்பத்திற்குள்ளான மனித உறவுகளின் மதிப்பீடுகள் வரை அவை பேசின. குடும்பத்தின் வெளியிலான சமுதாயத்தின் மாறுநிலைகள், அரசியல், சுற்றுச்சூழல்கள், மக்களின் அடிப்படைப் பொதுச் சிக்கல்கள் போன்றவற்றை வெளிப்படுத்துவதில் நாவல்கள் தொடர்ந்து முனைப்புக் காட்டி வந்திருக்கின்றன. **"தமிழ்நாட்டில் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து 1970க்கு முன்புவரை நாவல்களின் உருவாக்கம் இடதுசாரி சிந்தனா மரபு, திராவிடச் சிந்தனா மரபு மற்றும் இவ்விரண்டையும் விமர்சிக்கும் அல்லது இவற்றோடு முரணிய வலதுசாரி சிந்தனாமரபு என்னும் மூன்று நிலைகளில் நிகழ்ந்திருக்கின்றன"**[3] என்பது இங்கு கவனத்திற்குரியது.*

*நாவலின் மையப் பாத்திரங்கள் **ரங்கமணி, திரிவேணி, கமலவாசகி**. சிறு வயதிலேயே தன் தந்தையின் கொடூரமான மரணத்தைப் பார்த்தவன் ரங்கமணி. ரங்கமணியின் தந்தை விடுதலைப் போராட்ட வீரர். குறிப்பாக பழிக்குப் பழி பயங்கரவாத இயக்கத்தைச் சார்ந்தவர். திருநெல்வேலி மணியாச்சி ஜங்சனில் கலெக்டர் ஆஷ் சுடப்பட்டதற்கும் ரங்கமணியின் தந்தைக்கும் தொடர்புண்டு. இருந்தாலும் தப்பித்துவிட்டவர். இறுதியில் போலீஸின் லத்தியடியில் உயிர் துறந்தவர். ரங்கமணி பயங்கரவாதியாக மாறுவதன் பின்னணி இவ்வாறு அமைகிறது. எனிலும் அவன் மிக கண்ணியமானவன். கல்லூரியில் படிக்கும் போது கமலவாசகிடம் அவனுக்குத் தொடர்பு ஏற்பட்டு காதலாக மாறுகிறது. ரங்கமணி பயங்கரவாதி இயக்கத்தைச் சார்ந்தவன் என்று தெரிந்தபின் காதலில் மோதல் உருவாகிறது. பிரிவில் கமலவாசகியிடம் பழியுணர்ச்சிப் பெருகுகிறது.*

*திரிவேணி, காந்தியின் அஹிம்சையை கையில் எடுத்துக்கொண்டவள். ரங்கமணியை அவன் யாரென்று தெரிந்தும் நேசிக்கிறாள். அவனை காந்தியின் பாதைக்குத் திருப்ப, பயங்கரவாதத் திட்டமொன்றில் தன்னைப் பலியாக்கி அவனைத் திருத்துகிறாள். இந்நிகழ்ச்சி கமலவாசியையும் மாற்றி காந்தியின் பாதைக்கு வழி நடத்திவிடுகிறது. அஹிம்சை வெல்லுகிறது. சுதந்திரம் கிடைக்கிறது. கருத்து முரண்பாட்டில் காந்திஜியும் சுட்டுக்கொல்லப்படுகிறார். மிதவாமா? தீவிரவாதமா? பயங்கரவாதமா? என்னும் கேள்விகள் தொடரும் விவாதங்கள், எதனொன்றையும் குறைத்து மதிப்பிட்டு விடாதபடி, கதைச்சம்வங்கள் அதன் மீது வெளிச்சமிடுகின்றன. இறுதியில் உலக நன்மைக்கும், மனித நாகரிகத்திற்கும் அஹிம்சைதான் சிறந்த வழி என்று எடுத்துக் காட்டப்படுகிறது.*

*சுதந்திரப் போராட்டத்திற்கு முன் சாதாரண மனித உணர்ச்சிகளைத் தள்ளி வைப்பதும், சாவால்களும், தன்னையே தகுதிப்படுத்திக்கொள்ளும் தேவைகளும் இந்நாவல் அந்த காலகட்டதிற்குள்ளேயே அழைத்துச் சென்று நம்மை கண்ணீர் சிந்த வைக்கின்றது. அதேசமயம் சாதாரண உணர்ச்சிகளை, பணத்தை, சுய வாழ்வை அதன் பாதுகாப்பைப் பெரிதென்று நினைக்கும் மனிதர்களையும் இங்கு நாம் பார்க்கிறோம். இதனளவில் பாரதியார், வ.உ.சி,*

*இராஜாஜி, நேரு, மகாத்மா, திலகர், பட்டேல், ஜின்னா, சுபாஷ் சந்திர போஸ் என்று எண்ணற்றத் தலைவர்களும் கோட்ஸே போன்ற முரண் பயங்கரவாதிகளும் நாவலில் பாத்திரங்களாக வருகின்றனர்.*

*இந்திய சுதந்திரப் போராட்டத்தில், உலக நாடுகளின் வல்லரசுப் போட்டியில் இந்தியா எப்படி பயன்படுத்தப்பட்டது என்பது, சதுரங்க ஆட்டத்தில் பிரிட்டிஷ், ஜெர்மன், ஜப்பான், இரஷியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் இந்திய சுதந்திரப் போராட்டத்தை எப்படிப் பார்த்தன என்பதும் இந்நாவலின் முக்கிய கதைப்பின்னலாகும்.*

***இயக்கங்களின் தனித்துவம்***

*இந்தியாவுக்கு காந்திஜியின் அகிம்சை மூலமாகவே சுதந்திரம் கிடைத்துவிட்டது என அறிஞர்கள் ஒப்புக்கொள்வதில்லை. தீவிரவாத சக்தி, பயங்கரவாத சக்தியின் நெருக்குதல்களும் முக்கியக் காரணம் என்பர். இவ்வகையில் இந்நாவலில் வரும் பாத்திரங்களும் இதனை முக்கியத்துவப்படுத்துகின்றனர். தனிதமனித விருப்பம், காதல், வாழ்க்கை, பொருளாதாரம், கொள்கை என்ற கதையாக்கத்துடன் இயக்கங்களின் தனித்தன்மைகள் இந்நாவலில் புலனாகின்றன.*

*பயங்கரவாத இயக்கத்திலிருந்து ரங்கமணியை விலகச் சொல்கிறாள் கமலவாசகி. அவள் சாதாரண குடும்ப வாழ்க்கையை விரும்பினவளாகவும், பயங்கரவாத இயக்கத்தில் காதலனை இழக்க முடியாதவளாகவும் காணப்படுகிறாள். இங்கு ரங்கமணி,*

***"உன்னுடைய அப்பா கூட இதற்குச் சம்மதிக்கமாட்டார். அவர் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தாலும், வாழ்க்கையில் சில கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறார். என்னுடைய லட்சியமும் போக்கும் அவருக்குப் பிடிக்காவிட்டாலும் என்னுடைய தர்மப்படியே என்னை வாழ ஆசி கூறிய உத்தமர். அவருடைய மகளாகப் பிறந்துவிட்டு என்னை உன்னுடைய கொலுப் பொம்மையாக வந்து இரு என்கிறாயே, அப்படியிருக்க உன் தந்தையே சம்மதிக்க மாட்டார்"[4]*** *என்று கொள்கைச் சுதந்திரத்தைப் பேசுகிறான்.*

*திரிவேணிக்கும் ரங்கமணிக்கும் நடக்கும் உரையாடலில் தெய்வ நம்பிக்கை இழந்தவனாகவும் காணப்படுகிறான் ரங்கமணி,*

***"கடவுள் நம்மைக் கவனிக்கவில்லை என்கிறீர்களா?"[5]***

*என்று கேட்டாள் திரிவேணி.*

***"கடவுளுக்கும் நமக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லையே! இருந்திருந்தால் உங்கள் காந்தியின் பக்திக்கு இந்த நேரம் உருகியிருக்க மாட்டாரா கடவுள்! வெள்ளையனை ஆளவிட்டு நம்மைத் தாழவிட்டது இந்த கடவுள்தானே"[6] என்றான் எரிச்சலுடன்.*** *மேலும்,*

***"சாத்வீகப் போராட்டத்தின் தத்துவத்தை இன்னும் நீங்கள் புரிந்து கொள்ளவில்லை"[7] என்றாள் திரிவேணி.***

***"புரிந்து கொள்ள இதில் என்ன இருக்கிறது? இந்திய வரலாறே சாத்வீகத்தால் சீரழிந்ததுதானே? இரக்கத்தையும், அன்பையும் எதிரிகளிடம் காட்டப்போய்தான் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அடிமைகளாகிவிட்டோம். வீரம் என்றால் என்ன என்பதே தெரியாமல் போய்விட்டது. இரத்தம் சிந்த வேண்டிய நேரத்தில், தத்துவம் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இது வேடிக்கையாக இல்லையா? மகாத்மா காந்திமீது நீங்களெல்லாம் குருட்டு பக்தி. இது கோயிலில் செலுத்த வேண்டிய விஷயம்"[8]*** *என்று ஆவேசத்தோடு பேசினான்.*

இரண்டாம் உலகப்போரில் பிரிட்ஷாருடன் இந்தியா சேர்ந்து ஜெர்மன் மற்றும் ஜப்பானுக்கு எதிராகப் போராடவேண்டிய சூழ்நிலை நிலவியது. இராஜாஜியும் இதை ஆதரிக்கின்றார். இந்நிலை பல தலைவர்களுக்கும் இக்கட்டானத் தருணத்தை வழங்குகிறது. அமெரிக்காவின் பத்திரிகைத் நிருபரான மில்லருக்கும், ரங்கமணிக்கும் இது குறித்து வரும் உரையாடல் இந்தியாவின் அப்போதைய தேவையையும், அது வடிவம் பெரும் நிலையையும் விளக்குகிறது. மில்லர் பேசுவதாக அமையும் அப்பகுதியை கீழ்க்கண்டவாறு தொகுத்துத் தரப்படுகிறது.

" "எனக்கு என்னவோ காந்தியின் இந்தக் கொள்கை எடுபடவில்லை" என்கிறார் மில்லர்.

"எது" என்று தங்கமணி ஆவலோடு கேட்டான்.

"போரை வெறுப்பதுதான்"

"வந்தீர்களா வழிக்கு? ரயிலில் வரும்போது பெரிதாக அவருடைய அஹிம்சா தத்துவத்தையும் சத்தியாக்கிரகத்தையும் வானளாவப் புகழ்ந்தீர்களே?" என்றான் ரங்கமணி சிரித்துக்கொண்டே.

"ஏன் காந்தியின் சத்தியாக்கிரகத்தை இப்போதுகூடத்தான் புகழ்கிறேன். எங்கிருந்தாலும் புகழ்வேன், எந்தச் சமயத்திலும் புகழ்வேன். மீண்டும் சொல்கிறேன். காந்தியின் சத்தியாக்கிரகம் மாதிரி இதுவரை உலக வரலாற்றில் எந்த நாட்டிலும் ஓர் அற்புத ஆயுதம் கண்டுபிடிக்கப்படவே இல்லை. இதன் சக்தியும், வேகமும் அபரிமிதமானது. அதில் சந்தேகமே இல்லை, மிஸ்டர் ரங்கமணி. ஆனால் நான் சொல்ல வந்தது வேறு. சத்தியாக்கிரகத்தில் சக்தி உண்டா இல்லையா என்பதைப்பற்றிச் சொல்ல வரவில்லை. போர் வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றித்தான்"

"போர், மகாத்மாவின் அஹிம்சைக்குப் புறம்பானதாயிற்றே"

"இருந்தாலும் போருக்கும் சில நல்ல குணங்கள் உண்டு" "[9] என்றார் மில்லர்.

போரிட்டு இரத்தம் சிந்தி, தாங்க முடியாத வேதனைகளையெல்லாம் அனுபவித்து, பயங்கரத்தை உணர்ந்து பல நெருக்கடிகளுக்கிடையே வெற்றிப்பெற்றுச் சுதந்திரத்தை அடைந்தால் உங்களுக்குச் சுதந்திரத்தின் அருமையும் பெருமையும் புரியும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், தாம்பாளத்தில் வைத்துக்கொடுக்க அதை மேளதாளத்தோடு நீங்கள் வாங்கிக்கொண்டால் இந்திய மக்களால் சுதந்திரத்தின் மகிமை பற்றி என்ன தெரித்துகொள்ள முடியும்? ஆண்மை இழந்த சுதந்திரமும் அடிமைத்தனமும் ஒன்றுதான். சுதந்திரத்தின் தாத்பரியத்தையே புரிந்து கொள்ளாமல், வெறும் செம்மறி ஆட்டு மந்தை மாதிரிதான் வருங்காலத்தில் சுதந்திர இந்தியாவில் நடந்து கொள்வீர்கள். இமயம் முதல் குமரி முனை வரை நீங்கள் பல இனத்தவர்களாகப் பல மொழிகளைக் கொண்டிருக்கிறீர்கள். பிரிட்டீஷார் வரும் முன்பு நீங்கள் ஒரே நாட்டினராய் வாழ்ந்ததே இல்லை. பல பகுதிகளையும் இணைத்து, இந்தியா என்று ஒரே நாடாக ஆக்கியவர்களே பிரிடிஷார்தாம். ஒரே நாடாக மாறியதே தவிர, நீங்களெல்லோரும் ஒரே நாட்டினர்தாம் என்ற உணர்வு இன்னும் உங்களுக்கு ஏற்படவில்லை. சுதந்திரம் கிடைத்த பிறகும் ஒற்றுமையைப் பற்றியும், தேசிய உணர்வைப் பற்றியும், தாய்நாட்டுப் பற்றைப் பற்றியும் நீங்களே பிரச்சாரம் செய்ய வேண்டிய அவல நிலைக்கு ஆளாக வேண்டியிருக்கும். இந்த உணர்வெல்லாம், மக்களிடம் தானாகத் தோன்ற வேண்டியவை. பிரச்சாரத்தினால் இவற்றைப் புகுத்திவிட முடியாது என்பதே மில்லரின் வாதமாக இருக்கிறது.

இங்கே காணப்படும் தர்க்க முறையானது சுதந்திரம் என்பதை மையப்படுத்தியது. தனித்த சமூக, தனிமனித சுதந்திரமல்ல. ஒரு நாட்டின் சுதந்திரம். புதிதாக எழும் ஒருதேசியத்தின் சுதந்திரம். இங்கே புதிதாக எழும் தேசியம் என்பது மிக முக்கியமானது. மில்லரின் தர்க்கம் பயங்கரவாதம் மற்றும் அஹிம்சைவாதம் என்னும் இரண்டையும் ஏன்

ஏற்றுக்கொள்கிறது என்றால் புதிதாக எழும் தேசிய உணர்வானது மக்களுக்குள் இந்த இரண்டின் தெளிவையும் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தின் பார்வையால் உண்டானதாக இருக்கிறது. இதுவரை ஒரு தேசியமாக கட்டமைக்கப் படாமல் மொழி, மதம், இனம், சாதி, மன்னர், அரசர், சிற்றரசர், ஜமீன் என மக்களை ஆண்டு அடையாளமற்று இருந்த ஒரு நிலப்பரப்பானது இப்போது இந்தியா என்னும் பெயரில் வடிவமைப்பாகும்போது இவ்விரண்டு போக்குகளும் இந்தப் புதிய தேசியத்தை இழந்துவிடாத தன்மைக்குள் அவர்களை இனி வாழையடி வாழையாக இட்டுச்செல்லும் என்னும் பார்வையை உடையதாகிறது

**முடிவுரை**

இவ்வாறு இந்திய சுதந்திரப்போராட்ட வரலாற்று காலகட்டத்தின் இறுதிப்பகுதியை இந்நாவல் சுவையான கதைச் சம்பவங்களை தேசிய இயக்கத்தின் போக்குகளோடும் அதன் பல்வேறு பரிமாணங்களை பாத்திரங்கள் வழியாக எளிமையான நடையுடன் விவரித்துச் செல்கிறது. இதில் காந்தியச் சிந்தனை தர்க்கப்பூர்வமாக கையாளப்படுகிறது.

**சான்றெண் விளக்கக் குறிப்புகள்**

[1] ம.திருமலை, தமிழ் மலையாள நாவல் ஒப்பாய்வு,, ப. 8.
[2] சிவ.மங்கையர்க்கரசி, இலக்கிய இயக்கங்கள் (தமிழிலக்கியத்தின் சமூக வரலாறு, 63.
[3] ஞா.குருசாமி, தமிழ் இலக்கிய வரலாறு, ப.187.
[4] ரா.சு.நல்லபெருமாள், கல்லுக்குள் ஈரம்,ப.258.
[5] ர.சு.நல்லபெருமாள், மு.நூ,ப.258.
[6] மேலது, ப.258.
[7] மேலது, ப. 228.
[8] மேலது, ப.229.
[9] மேலதுப..429.

**முதன்மை சான்றாதாரம்**

நல்லபெருமாள், ர.சு., **கல்லுக்குள் ஈரம்**, என்.சி.பி.எச் வெளியீடு, சென்னை, மூ.ப. 1999.

**துணைமை சான்றாதாரம்**

குருசாமி, ஞா., **தமிழ் இலக்கிய வரலாறு**, அகரம், நிர்மலா நகர், தஞ்சாவூர் – 007, மு.ப. 2018.

திருமலை, ம., **தமிழ் மலையாள நாவல் ஒப்பாய்வு**, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, மு.ப.1987, ப. 8.

மங்கையர்க்கரசி, சிவ., **இலக்கிய இயக்கங்கள் (தமிழிலக்கியத்தின் சமூக வரலாறு),** என்.சி.பி.எச் வெளியீடு, சென்னை, , மு.ப.2004.